கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.196/2016**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 05.03.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 05.03.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செந்தில்குமார் | வயது | 47 |
| தந்தை பெயர் | நீலமேகம் | கிராமம் | அல்லூர், சேத்தியாத்தோப்பு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1, 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

6. வழக்கு சொத்தான RS.No.212/1c ஆதியில் நீலமேகம் பெயரில் இருந்தது என்றால் சரிதான். நீலமேகம் பெயரில் இருந்த சொத்தினை எவ்வாறு வருவாய்துறை ஆவணங்களில் வாதியான செந்தில்குமார் பெயரில் பெற்றப்பட்டது என்றால் வாரிசு அடிப்படையில். RS.No.212/1c எவ்வாறு RS.No.212/1c1, RS.No.212/1c3 என உட்பிரிவு செய்யப்பட்டன என்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் 1,2ம் பிரதிவாதிகள் 28.05.2019 அன்று TKBA/610/1428 பட்டா எண்.1360 வழக்கின் 4ம் பிரதிவாதியான மங்கையர்கரசியின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் மாற்றும் சமயத்தில் தெரியாது அதை தெரிந்து கொண்ட பிறகு தான் வழக்கை தொடுத்துள்ளேன்.

7. இதனை தொடர்ந்து சார் ஆட்சியர் சிதம்பரம் அவர்களிடம் ஏதேனும் ஆட்சேபனை மனு அளித்துள்ளேனா என்றால் வழக்கின் 4ம் பிரதிவாதிதான் கொடுத்தார். அதன் அடிப்படையில் எனக்கு அழைப்பாணை கொடுத்தார்கள். அழைப்பாணையை பெற்றுக்கொண்டு சார் ஆட்சியரிடம் என்னுடைய பெயரில் உள்ள சொத்திற்கு எவ்வாறு 4ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்பதற்கு ஆட்சேபனை ஏதேனும் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்தேன் அதை அவர்கள் எழுதி கொண்டு தான் உத்தரவை பிறப்பித்தார்கள். என்ன உத்தரவு

பிறப்பித்தார்கள் என்றால் எனது பெயரை நீக்க முடியாது என்று உத்தரவு பிறப்பித்தார்கள்.

8. வருவாய்துறை அலுவலர் சார் ஆட்சியர் உத்தரவை எதிர்த்து 2017 ல் மாவட்ட வருவாய்துறை அலுவலர் RS.No.212/1c2 க்கு ஆவணங்கள் அடிப்படையில் தீர்வு காணும் வரை கூட்டு பட்டாவாக இருக்கக்கூடும் என்ற பிறப்பித்த உத்தரவு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 4 ம் பிரதிவாதி 13.10.2010 அன்று RS.No.212/1c ல் 1952 ச.மீ ல் கிரையம் கொடுத்ததாக புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் கிரையம் கொடுக்கவில்லை 3 ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்தேன் அதை பின்னர் ரத்து செய்துவிட்டேன். நான் 19.01.2009 ல் பவர் கொடுத்தேன் என்றால் சரிதான். பவர் கொடுத்த ஆவணத்தில் என் சார்பாக கிரையம் செய்து கொள்ள அதிகாரம் உள்ளதாக சங்கதிகள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் சரிதான் ஆனால் என்னை அவரசமாக அழைத்து சென்று பதிவு செய்து கொண்ட காரணத்தினால் கையொப்பம் இடும் சமயத்தில் நான் முழுமையாக படித்துபார்க்கவில்லை.

9. பவர் 20.12.2010 ல் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பவர் ஆவணத்தில் கண்டுள்ள அம்சங்களின் அடிப்படையில் 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் ஆவணம் ஏற்படுத்தப்பட்டதன் அடிப்படையில் பட்டாவனது 4 ம் பிரதிவாதிகள் பெயரில் பட்டா உட்பிரிவு செய்யப்பட்டு என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.124/2011 ல் அரசாங்கத்தை தரப்பினாராக சேர்த்துள்ளேனா என்றால் சாட்சி முதலில் சேர்த்துள்ளேன் என்று கூறிவிட்டு பின்னர் தனிநபருக்கு இடையே தான் வழக்கு நடத்தப்பட்டது என்று கூறினார். அது அவர்கள் தொடுத்த வழக்கு. அரசு அலுவலர்கள் அவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லாத காரணத்தினால் அவ்வழக்கின் தீர்ப்பு அவர்கள் கட்டுப்படுத்தது என்றால் எனக்கு தெரியாது.

10. அரசு அலுவலர்கள் பட்டாவை 4 ம் பிரதிவாதி பெயிரில் உட்பிரிவு செய்யும் போது அவரின் பெயரில் உள்ள உரிமை ஆவணம் அனுபவ பாத்தியம் ஆகியவற்றை பரிசீலனை செய்து தான் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதற்குண்டான ஆவணங்கள் எதுவும் கிடையாது. மாவட்ட வருவாய் அலுவலரிடமோ அல்லது சார் ஆட்சியரிடமோ விசாரணையின் போதோ அல்லது வாக்குமூலத்திலோ மங்கையர்கரசியின் பெயரில் உரிமை ஆவணமோ எதுவும் கிடையாது என்று தெரிவித்தேனா என்றால் சொல்லியிருந்தேன். எனக்கும் வழக்கின் 3,4 ம் பிரிதிவாதியனா ஜம்புலிங்கம் மற்றும் மங்கையர்கரசிக்கும் தனிப்பட்ட

விரோதம் என்பதற்காக அவரின் பெயரில் உரிமை ஆவணம் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. மாவட்ட வருவாய் அலுவலர் கடலூர் 19.12.2017 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி RS.No.212/1c2 ல் மனுதாரருக்கு 1952 ச.அடி பட்டா எண்.1316 வழங்கப்பட்டது எதிர்மனுதாரர் ஆகிய எனக்கு 48 ச.அடி ஆவணங்களின் அடிப்படையில் கூட்டுப்பட்டவாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த உத்தரவை நான் பதிவு தபால் மூலமாக தான் தெரிந்துகொண்டேன். மேலும் மனுதாரர் எதிர்மனுதாரர் இருவருக்கும் ஆவணங்களின்படி தான் பட்டா எண்.1316 ல் பாகம் உள்ளதால் இருவரின் அனுபவத்தின் அடிப்படையில் கூட்டுப்பட்டவாக ஆவணங்களின் உள்ளவாறு உத்தரவிடப்படுகிறது என்றால் சரியல்ல. வழக்கில் கேட்ட பரிகாரத்தை வாதி மற்றும் 3,4 ம் பிரதிவாதிகள் ஆவணங்கள் வாயிலாக நீதிமன்றத்தில் நிருபணம் செய்யும் பட்சத்தில் 1,2 ம் பிரிதிவாதிகள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளார்கள்.

**சாட்சி விசாரணை 1, 2 ம் பிரதிவாதி தரப்பில் முடிவுற்றது.**

**3,4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram